சுருக்கம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – புதியதாகக் கட்டப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய கட்டிடத் திறப்பு விழா செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.106 நாள் 22.9.2009

படிக்கப்பட்டவை:

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106, கடிதம் ந.க.எண்.1575/2002/நிர்.1, நாள் 6.7.2009.

* * *

ஆணை:

படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் புதியதாகக் கட்டப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய கட்டிட திறப்பு விழா ஏற்பாட்டிற்கு ஆன செலவினம் குறித்து செயற்பொறியாளர் (மெரினா பிரிவு) மற்றும் மின்பொறியாளர் (மின் பிரிவு) ஆகியோர் அளித்த மதிப்பீடுகளின்படி செலவினத்தொகையாக ரூ.14,40,000/– (சிவில் வேலைகள் ரூ.8,90,000/–, மின் வேலைகள் ரூ.5,50,000/–)–க்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கடந்த 19.6.2009 அன்று தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய கட்டிட திறப்பு விழா நடைபெற்று முடிவுற்றதினைத் தொடர்ந்து செயற்பொறியாளர் (மெரினா பிரிவு) மற்றும் மின்பொறியாளர் (மின் பிரிவு) ஆகியோர் அனுப்பியுள்ள திறப்பு விழா செலவினங்களுக்கான தொகை ரூ.14,38,643.50/– எனவும் அதன் பட்டியல்களின் விவரம் பின்வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| சிவில் வேலைகளுக்கான செலவினம் | .. | ரூ. 8,88,706.00 |
| மின் வேலைகளுக்கான செலவினம் | .. | ரூ. 5,49,937.50 |
| கூடுதல் | .. | ரூ.14,38,643.50 |

மேற்படி பட்டியல்களுக்கான தொகையினை அனுமதி வழங்கும் பொருட்டும், நிதி ஒதுக்கீடு செய்யக்கோரியும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளது.

3. மேற்காணும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை ஏற்று, 19.6.2009 அன்று நடைபெற்ற, புதியதாகக் கட்டப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய கட்டடத் திறப்பு விழாவிற்கான செலவினத் தொகை ரூ.14,38,643.50/–க்கு (ரூபாய் பதினான்கு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து அறுநூற்று நாற்பத்து மூன்று மற்றும் ஐம்பது காசுகள்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகின்றது.

4. இத்தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

2070–00–ஏனைய நிருவாகப் பணிகள் – 001, நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I. திட்டத்தில் சேராதது – AB. – மாநிலத் தேர்தல் ஆணையம் – 17 – சிறு பணிகள். (து.தொ.கு.2070–00–001–AB-1703)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2009–2010–இன் திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. மேலும், இச்செலவினத்தினை 2009–2010–இன் திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்குரிய கருத்துருக்களை உரிய காலத்தில் தவறாது அரசுக்கு அனுப்பிட தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.52878/RD/2009, நாள் 15.9.2009–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான நிதியொதுக்கப் பேரேட்டு எண்.732. (எழுநூற்று முப்பத்து இரண்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், எண்.208/2, ஜவஉறர்லால் நேரு சாலை,
அரும்பாக்கம், சென்னை–106.
கருவூலக் கணக்கு அலுவலர், சென்னை–9.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/9.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–18.
<u>நகல்</u>
நிதித் (BG.II/RD) துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.